## பேரறிஞர் அண்ணா 57வது நினைவு நாள்!

# முதலமைச்சர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில் இன்று அமைதிப் பேரணி!


## மாவட்டக் கழகத் தோழர்களுக்கு - சென்னை மாவட்டக் கழகச் செயலாளர்கள் வேண்டுகோள்!

சென்னை, பிப்.3-

**பேரறிஞர் அண்ணா அவர்களின் 57வது நினைவு நாளையொட்டி முதலமைச்சர் - கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் இன்று நடைபெறும் அமைதிப் பேரணியில் ஒருங்கிணைந்த சென்னை மாவட்டக் கழகத்தினர் திரளாகப் பங்கேற்றிடுமாறு மாவட்டச் செயலாளர்கள் மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு, நே.சிற்றரசு, மாதவரம் எஸ்.சுதர்சனம், ஆர்.டி.சேகர் மயிலை த.வேலு ஆகியோர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.**

இதுகுறித்து அவர்கள் கூட்டாக விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

காஞ்சி தந்த காவியத் தலைவர் - உலகத் தமிழர் உள்ளங்களில் எல்லாம் - சிம்மாசனம் போட்டுக் கொலுவீற்றிருக்கும்செந்தமிழ்அறிஞர்-தமிழ் மொழி உயர்வுக்காகவும், தமிழர்களின் மேம்பாட்டுக்காகவும், தமிழ்நாட்டின் சிறப்புக்காகவும் வாழ்நாள் எல்லாம்ஓயாது பாடுபட்ட உத்தமர் - கடமை, கண்ணியம், கட்டுப்பாடு எனும் தாரக மந்திரத்தை அரசியல் உலகத்திற்கு அறிமுகம் செய்து வைத்த ஆற்றலாளர் - “இப்படை தோற்கின் எப்படை வெல்லும்” என்று தம்பிமார் பெரும்படையைக் கண்டு, நெஞ்சுயர்த்தி பெருமிதம் கொண்ட பெருமகன் - “மெட்ராஸ் ஸ்டேட்” என்ற பெயரை “தமிழ்நாடு” என்று பெயர் மாற்றம் செய்து தாய்க்குப் பெயர் தந்த தனிப் பெரும் தனயன் - சுயமரியாதை சுடரொளி - சொக்க வைக்கும் சொற்பொழிவாளர் - எழுத்து வேந்தர் - தென்னகத்தின் மிகப் பெரும் அரசியல் தலைவர் - பேரறிஞர் அண்ணா அவர்களின் **57வது** நினைவு நாளினையொட்டி, **மாண்புமிகு முதலமைச்சர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் கழகப் பொதுச்**



**செயலாளர் மாண்புமிகு துரைமுருகன், கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு மற்றும் கழக முன்னணியினர் இன்று (பிப்ரவரி - 3, செவ்வாய்க்கிழமை) காலை 7.00 மணிக்கு காமராஜர் சாலையில் அமைந்துள்ள அண்ணா நினைவிடத்தில் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்துவார்கள்.**

இந்த அமைதிப் பேரணி வாலாஜா சாலையில் உள்ள பேரறிஞர் அண்ணா சிலை அருகிலிருந்து புறப்பட்டு அண்ணா சதுக்கத்தை சென்றடையும்.

கழக இந்நாள் - முன்னாள் அமைச்சர்கள், இந்நாள் - முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைக் கழகச் செயலாளர்கள், தலைமைச் செயற்குழு - பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்டக் கழக, பகுதிக் கழக, வட்டக் கழக நிர்வாகிகள், மாநகராட்சி மன்ற முன்னாள் உறுப்பினர்கள் மற்றும் இளைஞர் அணி, மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி, மாணவர் அணி, தொண்டர் அணி, தொழிலாளர் அணி, விவசாய அணி, விவசாயத் தொழிலாளர் அணி, ஆதிதிராவிடர் நல உரிமைப் பிரிவு, மீனவர் அணி, கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை, இலக்கிய அணி, வழக்கறிஞர் அணி, நெசவாளர் அணி, பொறியாளர் அணி, மருத்துவ அணி, சிறுபான்மையினர் நலஉரிமைப் பிரிவு, வர்த்தகர் அணி, தகவல் தொழில் நுட்ப அணி, சுற்றுச்சூழல் அணி, அயலக அணி, அமைப்பு சாரா ஓட்டுநர் அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி, கல்வியாளர்கள் அணி, மாற்றுத்திறனாளிகள் அணி ஆகிய அனைத்து அணியினரும் அண்ணன் நினைவு போற்றி அஞ்சலி செலுத்த திரண்டு வாரீர் என சென்னை மேற்கு, சென்னை தென் மேற்கு, சென்னை கிழக்கு, சென்னை தெற்கு, சென்னை வடக்கு, சென்னை வடகிழக்கு ஆகிய மாவட்டக் கழகங்களின் சார்பில் கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு அவர்கள் தங்களது அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

## ஒன்றிய பட்ஜெட்டில், தமிழ்நாட்டிற்கென எந்தத் திட்டமும் இல்லை!

# தமிழ்நாட்டை மாற்றாந்தாய் மனப்பான்மையுடனே ஒன்றிய அரசு பார்ப்பதா?

## “தினகரன்” நாளேடு தலையங்கத்தில் கண்டனம்!

சென்னை, பிப்.3–

ஒன்றிய பட்ஜெட்டில், தமிழ்நாட்டிற்கென எந்த புதிய திட்டமும் இல்லை. தமிழ்நாட்டை மாற்றாந்தாய் மனப்பான்மையுடனே ஒன்றிய அரசு பார்ப்பதா? என “தினகரன்” நாளேடு தலையங்கத்தில் கண்டனம் தெரிவித்துள்ளது.

அது வருமாறு:–

ஒன்றிய பட்ஜெட்டில், தமிழ்நாடு, கேரளம் உள்ளிட்ட பேரவைத் தேர்தல்கள் நடைபெறவுள்ள மாநிலங்களுக்கு அறிவிப்புகள் வெளியாகும் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில், பெரிதாக எந்த அறிவிப்பும் இல்லை. தமிழ்நாடு உள்ளிட்ட தென் மாநிலங்களில் உள்ள அரிய கனிமவளங்களை பயன்படுத்திக் கொள்ளும் வகையில் அரிய கனிம வழித்தடங்கள் அமைக்கப்படும்.



தினகரன்

பிப்ரவரி 2, 2026 திங்கட்கிழமை

மாற்றாந்தாய் பட்ஜெட்

ஒன்றிய பட்ஜெட்டில், தமிழ்நாடு, கேரளம் உள்ளிட்ட பேரவைத் தேர்தல்கள் நடைபெறவுள்ள மாநிலங்களுக்கு அறிவிப்புகள் வெளியாகும் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில், பெரிதாக எந்த அறிவிப்பும் இல்லை. தமிழ்நாடு உள்ளிட்ட தென் மாநிலங்களில் உள்ள அரிய கனிமவளங்களை பயன்படுத்திக் கொள்ளும் வகையில் அரிய கனிம வழித்தடங்கள் அமைக்கப்படும். சென்னையிலிருந்து பெங்களூருவுக்கும், ஐதராபாத்திலிருந்து சென்னைக்கும் அதிவேக ரயில் பாதைத் திட்டம் செயல்படுத்தப்படும், ஒடிசா மாநிலம் தால்ச்சர் முதல் தமிழ்நாட்டின் ஆம்பூர் வரை புதிய நீர்வழிப்பாதை அமைக்கப்படும் திட்டம், பழவேற்காடு

சென்னையிலிருந்து பெங்களூருவுக்கும், ஐதராபத்திலிருந்து சென்னைக்கும் அதிவேக ரயில் பாதைத் திட்டம் செயல்படுத்தப்படும், ஒடிசா மாநிலம் தால்ச்சர் முதல் தமிழ்நாட்டின் ஆம்பூர் வரை புதிய நீர்வழிப் பாதை அமைக்கப்படும் திட்டம், பழவேற்காடு ஏரியில் சுற்றுலாவை மேம்படுத்தும் வகையில் 3 இடங்களில் பறவைகளை பார்வையிடும் மையங்கள் அமைக்கப்படும், முந்திரி உற்பத்தியை ஊக்குவிக்கும் வகையில் பல திட்டங்கள் செயல்படுத்தப்படும்,

தமிழ்நாட்டில் ஜவுளித்துறையை ஊக்குவிக்கும் வகையில் ஒருங்கிணைந்த திட்டம் செயல்படுத்தப்படும், ஒவ்வொரு மாவட்டத்திலும் குறைந்தது ஒரு மகளிர் விடுதி அமைக்கப்படும், பொதிகை மலையில் மலையேற்றச் சுற்றுலாத் திட்டம் செயல்படுத்தப்படும், ஆதிச்சநல்லூரில் கலாச்சார மையம் அமைக்கப்படும் என்பதை தவிர தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு உதவும் உருப்படியான திட்டங்கள் எதுவுமே நிதிநிலை அறிக்கையில் இல்லை.

மாநிலங்களுக்கான நிதிப்ப கிர்வு 41 சதவீதமாக உள்ளது. இதை 50% ஆக உயர்த்த வேண்டும் என தமிழ்நாடு அரசு கோரிக்கை விடுத்திருந்த நிலையில், தற்போதும் அந்த கோரிக்கை ஏற்கப்படாமல் பட்ஜெட் வெளியாகி உள்ளது.

தமிழ்நாட்டிற்கு நிதிப்பகிர்வு, இதர வளர்ச்சியடைந்த மாநிலங்களை விட குறைவாகவே அறிவிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டிற்கான வரிப்பகிர்வு 4.097 என்ற மிகக்குறைந்த சதவீத அளவிலேயே அடுத்த 5 ஆண்டுகளுக்கு இருக்கும். இதனால் ஒவ்வொரு ஆண்டும் சுமார் ஐந்தாயிரம் கோடி தமிழகத்திற்கு நிதியிழப்பு ஏற்படும்.

சரக்கு மற்றும் சேவை வரி விதிப்பு சீரமைப்பில் மாநிலங்களுக்கான நிதி வருவாய் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் இந்த ஆண்டு தமிழகத்திற்கான வரிகளின் பங்கு சுமார் 1200 கோடி ரூபாய் குறைக்கப்பட்டுள்ளது. ஜல் ஜீவன் குடிநீர் திட்டத்தில் தமிழகம் கோரியிருந்த 3112 கோடி ரூபாயை வழங்காத ஒன்றிய அரசு கடந்த பட்ஜெட்டில் 67 ஆயிரம் கோடியாக இருந்த இந்த திட்டத்திற்கான நிதியை தற்போது 17 ஆயிரம் கோடியாக குறைத் துள்ளது இந்த திட்டத்தை முடக்குவதற்கான முயற்சியாகவே பார்க்கப்படுகிறது.

அதேபோல் பிரதமர் கிராம சாலை மேம்பாட்டு திட்டத்திற்கு கடந்த பட்ஜெட்டில் 19 ஆயிரம் கோடி ஒதுக்குவதாக கூறிவிட்டு தற்போது திருத்திய மதிப்பீட்டில் வெறும் 11 ஆயிரம் கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. ஊரகப் பகுதிக்கான பிரதமர் வீடு கட்டும் திட்டத்திற்கு 35 ஆயிரத்து 832 கோடி ரூபாய் ஒதுக்குவதாக அறிவித்து விட்டு தற்போது 32 ஆயிரத்து 500 கோடி ரூபாயாக குறைத்து விட்டனர். பிரதமர் பயிற்சி திட்டத்திற் கான நிதி கடந்த பட்ஜெட்டில் 10,831 கோடி அறிவிக்கப்பட்ட நிலையில் தற்போது இந்த திட்டத்திற்கு வெறும் 526 கோடி என சொற்ப அளவிலேயே நிதி ஒதுக்கப்பட்டுள்ளது இதனால் இந்த திட்டம் பெரிய தோல்வியை தந்துள்ளது தெரியவருவதாக தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் வேதனை தெரிவித்துள்ளது நிதர்சனமான உண்மை.

மொத்தத்தில் இந்த பட்ஜெட்டில் தமிழ்நாட்டிற்கென எந்த புதிய திட்டமும் இல்லை. தமிழ்நாட்டை மாற்றாந்தாய் மனப்பான்மையுடனே ஒன்றிய அரசு பார்ப்பது மீண்டும் ஒருமுறை வெட்டவெளிச்சமாகியுள்ளது. மாற்றம் இல்லாத ஏமாற்றமாகவும் ஒன்றிய பா.ஜ. அரசுக்கு தமிழ்நாட்டை நினைவுகூர வைப்பதற்கு, தேர்தலால் கூட முடியவில்லை என்பதுவுமே உண்மை.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.



கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பிறந்த நாளை முன்னிட்டு மதுரை வடக்கு மாவட்ட திமுக சார்பில் மாவட்ட செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி ஏற்பாட்டில் தமிழர்களின் பாரம்பரியமிக்க வீர விளையாட்டான ஜல்லிக்கட்டு போட்டிக்கு பெருமை சேர்க்கும் வகையில் சட்டமன்ற தொகுதி வாரியாக அடுத்தடுத்து ஏழு ஜல்லிக்கட்டு விழா நடைபெற்று வருவதின் ஒரு பகுதியாக சோழவந்தான் சட்டமன்ற தொகுதிக்கான ஜல்லிக்கட்டுப் போட்டி அலங்காநல்லூர் கீழக்கரை கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங்கில் பிரம்மாண்டமாக நடைபெற்றது. இவ்விழாவில் மாவட்ட துணைச் செயலாளர் ஆ.வெங்கடேசன் எம்.எல்.ஏ. மற்றும் சோழவந்தான் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், ஒன்றிய மற்றும் பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், அரசு அதிகாரிகள், ஜல்லிக்கட்டு காளை உரிமையாளர்கள், மாடுபிடி வீரர்கள், ஆயிரக்கணக்கான பொதுமக்கள் பங்கேற்றனர்.



இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று (02.02.2026) சென்னை, அமைந்தகரை ஈ.வெ.ரா சாலையில் கட்டப்பட்டுள்ள நடைமேம்பாலத்தினை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு தொடங்கி வைத்தார். உடன் மேயர் திருமதி.ஆர்.பிரியா, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் மு.தயாநிதி மாறன், சென்னை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ரஷ்மி சித்தார்த் ஜகடே, சட்டமன்ற உறுப்பினர் எம்.கே. மோகன், நெடுஞ்சாலைத்துறை தலைமைப் பொறியாளர் எஸ்.ஜவஹர் முத்துராஜ், சென்னை பெருநகர மாநகராட்சி நிலைக்குழுத்தலைவர் (பணிகள்) நே.சிற்றரசு ஆகியோர் உள்ளனர்.

# அண்ணா வழியில் அயராது உழைப்போம்! வெல்வோம்!

## உங்களில் ஒருவன் கடிதம்... முதல் பக்கத் தொடர்ச்சி

இப்போதும் நாம் அண்ணா வழியில் அயராது உழைக்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம். இந்திக்கு இடமில்லை என்று இரு மொழிக் கொள்கையை அண்ணா நிலை நாட்டிய மாநிலத்தில், இந்தியுடன் சமஸ்கிருதத்தையும் திணிக்கும் முயற்சியில் தீவிரமாக இருக்கிறது ஒன்றிய பா.ஜ.க அரசு. தமிழ்நாட்டை வஞ்சிக்கும் பா.ஜ.க. அரசுக்குச் சாமரம் வீசும் அடிமையாக இருக்கிறது அண்ணாவின் பெயரை கட்சியில் வைத்திருக்கும் அ.தி.மு.க..

வன்முறை தவிர்த்து வறுமையை வெல்ல வேண்டிய மண்ணில், எந்த வகையில் மத வன்முறையைத் தூண்டலாம் என்பதே பா.ஜ.க.வின் நோக்கமாக உள்ளது. அதற்கு மௌன சாட்சியாக அமைதி காக்கிறது அ.தி.மு.க.

மாநிலத்தில் சுயாட்சி மத்தியில் கூட்டாட்சி என்பதைத் திராவிட மாடல் அரசு தனது ஒவ்வொரு செயல்பாட்டிலும் ஒன்றிய பா.ஜ.க அரசுக்கு உணர்த்திக் கொண்டே இருக்கிறது. திராவிட மாடலின் குரல், பா.ஜ.க. ஆட்சியில் இல்லாத மற்ற மாநிலங்களிலும் ஒலிக்கிறது. மாநில சுயாட்சி என்றாலே பயந்து ஒளிந்து கொள்கிறது, சுயாட்சி எண்ணமோ சுயமரியாதை உணர்வோ இல்லாத அ.தி.மு.க.

**மக்களிடம் செல் என்று பேரறிஞர் அண்ணா சொன்னது போல, திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இல்லாத கொரோனா காலத்திலும் மக்களிடம் சென்றது. ஆட்சியில் மகத்தான திட்டங்களை செயல்படுத்தும் இந்த ஐந்தாண்டுகளிலும் மக்களுடனேயே பயணிக்கிறது. மக்களுக்காகவே செயல்படுகிற மக்கள் இயக்கமான திராவிட முன்னேற்றக் கழகத்தை 2026 சட்டமன்றத் தேர்தலிலும் வெற்றி பெற வைத்து, திராவிட மாடல் 2.0 ஆட்சி அமைத்திட வேண்டும் என்ற எண்ணம் தமிழ்நாட்டு மக்களின் மனதில் பதிந்துள்ளது.**

தமிழ்நாட்டிற்கு வஞ்சகம் செய்து வரும், தமிழர்களின் எதிரியான பா.ஜ.க.வும் அதனுடன் இணைந்துள்ள அ.தி.மு.க.வும் நமக்கு எதிராகச் செயல்படுவதாக நினைத்து தமிழ்நாட்டின் வளர்ச்சியை மீண்டும் படுகுழியில் தள்ள நினைக்கும் சதியை, அண்ணாவின் தம்பிகளானகலைஞரின் உடன்பிறப்புகளான உங்களால்தான் முறியடித்திட முடியும். அந்த உறுதியை ஏற்கும் வகையில், பிப்ரவரி 3 அன்று பேரறிஞர் அண்ணா நினைவு நாளில் அண்ணா சதுக்கம் நோக்கி அமைதிப் பேரணியில் உங்களில் ஒருவனான நானும் கழக முன்னோடிகளும் கழகத் தொண்டர்களும் பங்கேற்கிறோம்.

**என்றென்றும் நம் நெஞ்சில் நிறைந்திருக்கும் பேரறிஞர் அண்ணாவின் நினைவு நாளில் தமிழ்நாடெங்கும் அவரது நினைவைப் போற்றும் வகையில் கழகக் கிளைகள்தோறும் பேரறிஞர் பெருந்தகை அண்ணாவின் படத்திற்கு மாலையிட்டு, மலர் தூவி மரியாதை செலுத்தி, முத்தமிழறிஞர் கலைஞர் வழங்கிய ஐம்பெரும் முழக்கங்களை உறுதிமொழியாக ஏற்று, தேர்தல் களப்பணிகளுக்கு ஆயத்தமாவோம்.**

அண்ணா வழியில் அயராது உழைப்போம். மக்களிடம் செல்வோம். அவர்களின் ஆதரவுடன் சட்டமன்றத் தேர்தலில் உறுதியாக வெல்வோம்.

அன்புடன்

**மு.க.ஸ்டாலின்**

திருவள்ளுவர் ஆண்டு 2057,
தை 19,
02.02.2026

